SC.NO. 43/2025

**PW 6 :** ரஞ்சித்குமார் **த/பெ.**லட்சுமணன்

நாள் :15.07.2026.

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் சித்தேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பஞ்சாயத்தில் வார்டு மெம்பராக உள்ளேன். நான் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடத்துக்கு சென்றேன்.

நான் செல்வதற்கு முன்பாகவே பஞ்சாயத்து தலைவரும் ஊர் பொது மக்கள் நிறைய பேர் சம்பவ இடத்தில் இருந்தார்கள். அப்போது போலீசார் என்னை விசாரித்த போது நான் எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினேன் என்று சொன்னால் சரியல்ல நான் பார்த்ததை கூறினேன்.

நான் சம்பவ இடத்துக்கு செல்லும் போது காலை 7 மணி. புகாரை பஞ்சாயத்து தலைவர் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல போலீசார் அதற்கு முன்பாகவே சம்பவ இடத்துக்கு வந்து விட்டார்கள்.

என்னை விசாரிக்கும் போது போலீசார் சம்பவ இடத்திலிருந்த பொது மக்களையும் விசாரித்தார்கள் என்றால் சரி. இறந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள்.

இறந்தவரின் உறவினர்கள் அப்போது அங்கு யாரும் வரவில்லை கொஞ்சம் நேரம் கழித்து தான் வந்தார்கள். என்னை விசாரித்தவும் போலீசார் சம்பவ இடத்திலேயயே என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

எனக்கு தகவல் காலை 6.45 மணியளவில் தெரியவந்தது. சம்பவ இடத்துக்கும் என் வீட்டுக்கும் இடைப்பட்ட தொலைவு 2 கி.மீ. காலை 7 மணியளவில் நான் சம்பவ இடத்துக்கு சென்றேன்.

மற்றபடி எனக்கு இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் தெரியாது. காலை 8.30 முதல் 9 மணி வரை போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்து கொண்டிருந்தார்கள். ஒரு மணி நேரம் விசாரணை நடந்தது.

நான் சென்றவுடன் 1/2 மணி நேரத்துக்குள் இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனைக்காக எடுத்து சென்றார்கள். பிறகு 1/2 மணி நேரம் சம்பவ இடத்தில் விசாரித்தார்கள். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.07.15 19:20:35 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.